6. இன்னா செயினும் விடுதற்கு அரியாரைத்
துன்னத் துறத்தல் தகுவதோ - துன்னருஞ்சீர்
விண்குத்து நீள்வரை வெற்ப! களைபவோ
கண்குத்திற்று என்றுதம் கை.

7. இலங்குநீர்த் தண்சேர்ப்ப! இன்னா செயினும்
கலந்து பழிகாணார் சான்றோர் கலந்தபின்
தீமை எடுத்துரைக்கும் திண்ணறி வில்லாதார்
தாமும் அவரின் கடை.

8. ஏதிலார் செய்தது இறப்பவே தீதெனினும்
நோதக்கது என்னுண்டாம் நோக்குங்கால் - காதல்
கழுமியார் செய்த கறங்கருவி நாட!
விழுமிதாம் நெஞ்சத்துள் நின்று.

9. தமரென்று தாம்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தார் ஆயின் அவரைத்
தமரினும் நன்கு மதித்துத் தமரன்மை
தம்முள் அடக்கிக் கொளல்.

10. குற்றமும் ஏனைக் குணமும் ஒருவனை
நட்டபின் நாடித் திரிவேனேல் - நட்டான்
மறைகாவா விட்டவன் செல்வழிச் செல்க
அறைகடல்சூழ் வையம் நக.



# அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)

**கோயம்புத்தூர் – 641 018**

**நான்காம் பருவம்**

**பொதுத்தமிழ் தாள் – 4**

**இளங்கலை – அறிவியல் பட்டம் பயிலும்**
**இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்குரியது**

(2015–2018 ஆம் கல்வியாண்டுக்குரியது)

பதிப்பாசிரியர்கள்

**முனைவர் சந்திரா கிருஷ்ணன்**
**முனைவர் இரா. செல்வராஜ்**
**முனைவர் மா. சுப்புரத்தினம்**
**முனைவர் சோ. குருசாமி**
**முனைவர் ச. கலைச்செல்வன்**
**முனைவர் இ. சேனாவரையன்**

வெளியீடு

**தமிழ்த்துறை**
**அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)**
**கோயம்புத்தூர் – 641 018**

## நாலடியார்

***நா**ன்கடி வெண்பாக்களால் ஆன இந்நூல் ஆர் விகுதி பெற்று நாலடியார் என வழங்கப்படுகிறது. நாலடி, நாலடி நானூறு, வேளாண்வேதம் என்னும் வேறு பெயர்களும் உண்டு. திருக்குறளுக்குச் சமமாகப் போற்றப்படுகிறது. இதனை "ஆலும் வேலும் பல்லுக்குறுதி. நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்னும் அடியால் அறியலாம். நாலடியார் சமண முனிவர்களால் இயற்றப்பட்டது. இந்நூலைத் தொகுத்தவர் பதுமனார். கடவுள் வாழ்த்து நீங்கலாக 40 அதிகாரங்களையும், இரண்டு இயல்கள் என 400 பாடல்களையும் கொண்டது. ஜி.யு. போப் இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.*

### நட்பிற் பிழை பொறுத்தல்

1. நல்லா ரெனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லா ரெனினும் அடக்கிக் கொளல்வேண்டும்
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கும் உண்டு.

2. செறுத்தோறு உடைப்பினும் செம்புனலோடு ஊடார்
மறுத்தும் சிறைசெய்வார் நீர்நசைஇ வாழ்நர்
வெறுப்ப வெறுப்ப செயினும் பொறுப்பரே
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு

3. இறப்பவே தீய செயினும் தம் நட்டார்
பொறுத்தல் தகுவதொன்று அன்றோ – நிறக்கோங்கு
உருவவண்டு ஆர்க்கும் உயர்வரை நாட
ஒருவர் பொறைஇருவர் நட்பு.

4. மடித்திரை தந்திட்ட வான்கதிர் முத்தம்
கடுவிசை நாவாய் கரையலைக்கும் சேர்ப்ப
விடுதற்கு அரியார் இயல்பிலரேல் நெஞ்சம்
சுடுதற்கு முட்டிய தீ.

5. இன்னா செயினும் விடற்பாலர் அல்லாரைப்
பொன்னாகப் போற்றிக் கொளல்வேண்டும் பொன்னொடு
நல்லிற் சிதைத்த தீ நாடொறும் நாடித்தம்
இல்லத்தில் ஆக்குத லால்.

9. முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாஞ்
சார்பிலார்க்கு இல்லை நிலை.

10. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

### 2. பண்புடைமை

1. எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

2. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

3. உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.

4. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.

5. நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

6. பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

7. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

8. நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றார் ஆதல் கடை.

9. நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்.

10. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று.



## அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), கோவை – 18
## தமிழ்த்துறை

**மொழிப்பாடம் – தமிழ் நான்காம் பருவம் 2015-18-I5Tam41L**

**அலகு 1 :**

| | |
|---|---|
| 1. குறுந்தொகை (5 பாடல்கள்) | 1. 38 – எலுவ! சிறாஅர் ஏமுறு நண்ப! |
| | 2. 57 – பூ இடைப்படினும் |
| | 3. 61 – தச்சன் செய்த |
| | 4. 221 – அவரோ வாரார் |
| | 5. 144 – கழிய காவி குற்றும் |
| 2. நற்றிணை (2 பாடல்கள்) | 1. 110 – பிரசம் கலந்த வெண்சுவைத் |
| | 2. 154 – கானமும் கம்மென்றன்றே |
| 3. அகநானூறு (2 பாடல்கள்) | 1. 48 – அன்னாய் வாழி |
| | 2. 337 – சாரல் யாஅத்து |
| 3. கலித்தொகை (2 பாடல்கள்) | 1. 51 – சுடர்த் தொடிஇ |
| | 2. 127 – தெளி இணர் ஞாழலும் |

**அலகு 2 :**

| | |
|---|---|
| 1. புறநானூறு (2 பாடல்கள்) | 1. 73 – மெல்லவந்து |
| | 2. 86 – சிற்றில் நற்றூண் |
| 2. பத்துப்பாட்டு | சிறுபாணாற்றுப்படை முழுவதும் |
| 3. திருக்குறள் (2 அதிகாரம்) | 1. வெகுளாமை |
| | 2. பண்புடைமை |
| 4. நாலடியார் (1 அதிகாரம்) | 1. நட்பிற்பிழை பொறுத்தல் |

**அலகு 3 : புதினம் (தேடல்)**

பொன்னீலன், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்,
சென்னை – 600 098.

அலகு 4 : மொழித்திறன்

1. இலக்கணம் திணை, துறைவிளக்கம் (அகம், புறம்)
(செய்யுள் பகுதியிலிருந்து பாடம் தழுவியது)

2. நோக்குநூல் பயன்படுத்துதல்

i. அகராதி – விளக்கம், வகைகள் – சொற்பொருள்–சிறப்புப்பொருள் – பெயரகராதி – பயன்படுத்தும் முறை

ii. நிகண்டு – நூல் விளக்கம் – வகைகள் – பார்க்கும் முறை

ii. கலைக்களஞ்சியம் – நூல் விளக்கம் – வகைகள் – பார்க்கும் முறை

3. இலக்கிய வரலாறு : 1. சங்க இலக்கியம்
i. எட்டுத்தொகை
ii. பத்துப்பாட்டு

2. நீதி இலக்கியம்

3. புதினத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

அலகு 5 : படைப்பாற்றல்

1. மொழிபெயர்ப்பு : 1. ஆங்கிலத்திலிருந்து தமிழில் அலுவலக வரைவுகள் – அலுவலக கடிதங்களை மொழி பெயர்த்தல்.

2. சிறுகதை : தலைப்பு, சூழல், கரு தந்து திறனை வெளிப்படச் செய்தல்

3. ஓரங்க நாடகம் : பாத்திரங்கள் கரு, தலைப்புத் தந்து திறனை வெளிப்படச் செய்தல்.

# திருக்குறள்

*நீதி நூல்களிலெல்லாம் உலகப்புகழ் வாய்ந்த ஒப்பற்ற நூலாகத் திகழ்வது திருக்குறளாகும். திருக்குறளை எழுதியவர் திருவள்ளுவர். பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று. அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவுகளை உடையது. 133 அதிகாரங்களையும், அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் 1330 குறட்பாக்களைக் கொண்டது. திருவள்ளுவருக்கு நாயனார், தேவர், தெய்வப் புலவர், நன்முகனார், மாதானுபங்கி, செந்நாப் போதார், பெருநாவலர் என்ற வேறு பெயர்களும் உண்டு. திருக்குறள் தமிழ்மறை என்றும் பொதுமறை என்றும் போற்றப்படும் சிறப்புடையது.*

## 1. பெரியாரைத் துணைக்கோடல்

**1. அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**
**திறனறிந்து தேர்ந்து கொளல்.**

**2. உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்**
**பெற்றியார்ப் பேணிக் கொளல்.**

**3. அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல்.**

**4. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்**
**வன்மையு ளெல்லாந் தலை.**

**5. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்**
**சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.**

**6. தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்**
**செற்றார் செயக்கிடந்த தில்.**

**7. இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே**
**கெடுக்குந் தகைமை யவர்.**

**8. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பா ரிலானுங் கெடும்.**

## நல்லியக்கோடன் அளிக்கும் பரிசில்

திறல் சால் வென்றியொடு தெவ்வுப் புலம் அகற்றி,
விறல் வேல் மன்னர் மன் எயில் முருக்கி,
நயவர், பாணர், புன்கண் தீர்த்தபின்,
வயவர் தந்த வான் கேழ் நிதியமொடு;
பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி
உருவ வான் மதி ஊர்கொண்டாங்கு.
கூர் உளி பொருத வடு ஆழ் நோன் குறட்டு
ஆரம் சூழ்ந்த அயில் வாய் நேமியொடு,
சிதர் நனை முருக்கின் சேண் ஓங்கு நெடுஞ் சினைத்
ததர் பிணி அவிழ்ந்த தோற்றம் போல,
உள் அரக்கு எறிந்த உருக்குறு போர்வை,
கருந் தொழில் வினைஞர் கைவினை முற்றி,
ஊர்ந்து பெயர் பெற்ற எழில் நடைப் பாகரொடு;
மா செலவு ஒழிக்கும் மதனுடை நோன் தாள்
வாள் முகப் பாண்டில் வலவனொடு; தரீஇ,
அன்றே விடுக்கும், அவன் பரிசில் -

## நல்லியக்கோடனது புகழும் பண்பும்

மென் தோள்,
துகில் அணி அல்குல், துளங்கு இயல் மகளிர்
அகில் உண விரித்த அம் மென் கூந்தலின்,
மணி மயில் கலாபம் மஞ்சு இடைப் பரப்பி,
துணி மழை தவழும் துயல் கழை நெடுங் கோட்டு,
எறிந்து உரும் இறந்த ஏற்று - அருஞ் சென்னி,
குறிஞ்சிக் கோமான், கொய் தளிர்க் கண்ணி,
செல் இசை நிலைஇய பண்பின்,
நல்லியக்கோடனை நயந்தனிர் செலினே.

ஒய்மான் நாட்டு நல்லியக்கோடனை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது.



## வினா அமைப்பு முறை

### பகுதி I : தமிழ் – தாள் : 4

(விழுமியம், செய்யுள், புதினம் – மொழித்திறன் – படைப்பாற்றல்)

காலம் : 3 மணி — மதிப்பெண் : 75

### பகுதி அ

பின்வருவனவற்றிற்கு ஓரிரு சொற்களில் விடை தருக. 15 (15 x 1 = 15)

பதினைந்து வினாக்கள் ஒவ்வொரு அலகிலிருந்தும் 3 வினாக்கள் இடம் பெறல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| (1–5) | ஓரிரு சொற்களில் விடை தருக | 5 x 1=5 |
| (6–9) | கோடிட்ட இடங்களை நிரப்புக | 4 x 1=4 |
| (10–12) | சரியான விடையைத் தேர்ந்தெடுக்க | 3 x 1=3 |
| (13–15) | சரியா தவறா என்று குறிப்பிடுக | 3 x 1=3 |

### பகுதி ஆ

பின்வரும் வினாக்களுக்கு 30 சொற்களில் விடை தருக 20 (10 x2 = 20)

பத்து வினாக்கள் இது அல்லது அது முறையில் இடம் பெறல் வேண்டும்

(16–17) அலகு 1 செய்யுள்
(18–19) அலகு 2 செய்யுள்
(20–21) அலகு 3 புதினம்
(22–23) அலகு 4 மொழித்திறன்
(24–25) அலகு 5 படைப்பாற்றல்

### பகுதி இ

பின்வரும் வினாக்களுக்கு 100 சொற்களில் விடை தருக 20 (5 x4 = 20)

ஐந்து வினாக்கள் இது அல்லது அது முறையில் இடம் பெறல் வேண்டும்

(26) அலகு 1 செய்யுள்
(27) அலகு 2 செய்யுள்
(28) அலகு 3 புதினம்
(29) அலகு 4 மொழித்திறன்
(30) அலகு 5 படைப்பாற்றல்

## பகுதி ஈ

பின்வரும் வினாக்களுக்கு 300 சொற்களில் விடை தருக 20 (2 x10 = 20)

இரு வினாக்கள் இது அல்லது அது முறையில் இடம் பெறல் வேண்டும்

**(31)** அலகு 1, 2 செய்யுள் அல்லது அலகு 4 மொழித்திறன் – இலக்கிய வரலாறு

**(32)** அலகு 3 புதினம் அல்லது அலகு 5 படைப்பாற்றல் – மொழிபெயர்ப்பு – அலுவலக நிலை / சிறுகதை / ஓரங்க நாடகம்

(பகுதி – அ : அனைத்து வினாக்களுக்கும் விடை தருதல் வேண்டும். பகுதி – ஆ, இ, ஈ : ஒவ்வொரு வினாவும் இரு வினாக்களுக்கு நடுவில் (அல்லது) என்ற முறையில் அமைதல் வேண்டும். மதிப்பெண் பகிர்வு : ஒவ்வொரு அலகிற்கும் 15 மதிப்பெண் வீதம் பகிர்வு (5 x15 = 75)



அறிவு மடம் படுதலும், அறிவு நன்கு உடைமையும்,
வரிசை அறிதலும், வரையாது கொடுத்தலும்,
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த;
பல் மீன் நடுவண் பால் மதி போல,
இன் நகை ஆயமொடு இருந்தோற் குறுகி -

### யாழ் வாசித்து, அரசனைப் புகழ்ந்து பாடுதல்

பைங் கண் ஊகம் பாம்பு பிடித்தன்ன,
அம் கோட்டுச் செறிந்த அவிழ்த்து வீங்கு திவவின்;
மணி நிரைத்தன்ன வனப்பின்; வாய் அமைத்து,
வயிறு சேர்பு ஒழுகிய வகை அமை அகளத்து,
கானக் குமிழின் கனி நிறம் கடுப்ப,
புகழ் வினைப் பொலிந்த பச்சையொடு; தேம் பெய்து,
பாடு துறை முற்றிய பயன் தெரி கேள்விக்
கூடு கொள் இன் இயம் - குரல் குரல் ஆக,
நூல் நெறி மரபின், பண்ணி, ‘ஆனாது,
முதுவோர்க்கு முகிழ்த்த கையினை’ எனவும்,
‘இளையோர்க்கு மலர்ந்த மார்பினை’ எனவும்
‘ஏரோர்க்கு நிழன்ற கோலினை’ எனவும்,
‘தேரோர்க்கு அழன்ற வேலினை’ எனவும்,
நீ சில மொழியா அளவை -

### பாணர் முதலியோர்க்கு அவன் உண்டி முதலியன கொடுத்தல்

மாசு இல்,
காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇ,
பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்கி,
கா எரியூட்டிய கவர் கணைத் தூணிப்
பூ விரி கச்சைப் புகழோன் தன்முன்,
பனிவரை மார்பன், பயந்த நுண் பொருட்
பனுவலின் வழாஅப் பல் வேறு அடிசில்,
வாள் நிற விசும்பின் கோள்மீன் சூழ்ந்த
இளங் கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து
விளங்கு பொற்கலத்தில் விரும்புவன பேணி,
ஆனா விருப்பின், தான் நின்று ஊட்டி,

பிடிக் கை அன்ன பின்னு வீழ் சிறு புறத்துத்
தொடிக் கை மகடூஉ, மக முறை தடுப்ப,
இருங் காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த
அவைப்பு மாண் அரிசி அமலை வெண் சோறு,
கவைத் தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர்.

### நல்லியக் கோடனின் மூதூர் அண்மையது என்று அறிவித்தல்

எரி மறிந்தன்ன நாவின், இலங்கு எயிற்று,
கரு மறிக் காதின், கவை அடிப் பேய்மகள்
நிணன் உண்டு சிரித்த தோற்றம் போல,
பிணன் உகைத்துச் சிவந்த பேர் உகிர், பணைத் தாள்,
அண்ணல் யானை அருவி துகள் அவிப்ப,
நீறு அடங்கு தெருவின் அவன் சாறு அயர் மூதூர்
சேய்த்தும் அன்று; சிறிது நணியதுவே.

### வாயிலின் சிறப்பு

பொருநர்க்கு ஆயினும் புலவர்க்கு ஆயினும்,
அரு மறை நாவின் அந்தணர்க்கு ஆயினும்,
கடவுள் மால் வரை கண் விடுத்தன்ன,
அடையா வாயில் அவன் அருங் கடை குறுகி –

### நல்லியக்கோடன் அவையில் வீற்றிருக்கும் காட்சி அவன் குணங்களும் அவற்றை ஏத்துவோரும்

செய்ந்நன்றி அறிதலும், சிற்றினம் இன்மையும்,
இன் முகம் உடைமையும், இனியன் ஆதலும்,
செறிந்து விளங்கும் சிறப்பின் அறிந்தோர் ஏத்த;
அஞ்சினர்க்கு அளித்தலும், வெஞ் சினம் இன்மையும்,
ஆண் அணி புகுதலும், அழிபடை தாங்கலும்,
வாள் மீக் கூற்றத்து வயவர் ஏத்த;
கருதியது முடித்தலும், காமுறப் படுதலும்,
ஒரு வழிப் படாமையும், ஓடியது உணர்தலும்,
அரி ஏர் உண்கண் அரிவையர் ஏத்த;



## அலகு – I
## செய்யுள்

# நான்காம் பருவம்

## அறிமுகவுரை

*பட்ட வகுப்பு நான்காம் பருவத்தில் பயிலும் மாணவர்களுக்குப் பாடப் பகுதியாக சங்க காலமும், சங்கம் மருவிய காலமும் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவை அகப்பாடல்கள், புறப்பாடல்கள் என்னும் பாகுபாட்டில் அமைந்துள்ளன.*

*சங்கத் தமிழரது வாழ்வியல் கண்ணோட்டம் வியத்தற்குரியது என்பதும், அவ்வுயர் கண்ணோட்டம் வாழ்வின் மதிப்பீடுகளும் தனிமனித வாழ்வின் அடிப்படையிலும் புரிந்து கொள்ளத்தக்கனவாகும். வாழ்வு அனுபவக் கனிவும் தன்னிலையில் தாழாத மதிப்புணர்வும் மானிடத்தின் வெற்றியில் நம்பிக்கையும் கொண்ட இனக்குழு வாழ்வின் சிந்தனைப் பரிமாணத்தை அறிந்து கொள்ள இளம் உள்ளங்களுக்கு இப்பகுதி உதவும்.*

*பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான திருக்குறளும், நாலடியாரும் சிறந்த கருத்துக்களைக் கொண்டுள்ளன. பத்துப்பாட்டில் சிறுபாணாற்றுப்படையானது வேனிற்கால வருணனை, வஞ்சி மாநகரின் சிறப்பு, விறலியரோடு இருக்கும் இரவலன், மதுரையின் மாண்பு, உறந்தையின் சிறப்பு, வள்ளல்களின் சிறப்பு, நல்லியக்கோடனின் ஆட்சித்திறம், பரிசளிக்கும் மாண்பு போன்றவற்றை நமக்குத் தெரியப்படுத்துகின்றன.*

*தமிழர்தம் அகவாழ்வு, களவு, கற்பு என்னும் கை கோள்களை உடையது. அவற்றை விளக்குமுகமாக குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு முதலியவற்றிலிருந்து பாடல்கள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழர்தம் புறவாழ்வை எடுத்துரைக்கும் வகையில் புறநானூறு பகுதியிலிருந்து பாடல்கள் வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நான்காம் பருவத்திற்குரிய செய்யுட் பகுதி மனித வாழ்வின் நேற்றைய நிகழ்வுகள் நிகழ்காலத்தினருக்கு உணர்த்தப்பட்டு, வருங்காலத்தினருக்கு வழிகாட்டும் வகையில் அமைந்துள்ளன.*



தளை அவிழ் தெரியல் தகையோற் பாடி,
அறற் குழற் பாணி தூங்கியவரொடு,
வறற் குழற் சூட்டின், வயின் வயின் பெறுகுவிர்:

### வேலூர் வளமும் எயினர் விருந்தும்

பைந் நனை அவரை பவழம் கோப்பவும்,
கரு நனைக் காயாக் கண மயில் அவிழவும்,
கொழுங் கொடி முசுண்டை கொட்டம் கொள்ளவும்,
செழுங் குலைக் காந்தள் கை விரல் பூப்பவும்,
கொல்ல நெடு வழிக் கோபம் ஊரவும்,
முல்லை சான்ற முல்லை அம் புறவின்,
விடர் கால் அருவி வியல் மலை மூழ்கிச்
சுடர் கால்மாறிய செவ்வி நோக்கி,
திறல் வேல் நுதியின் பூத்த கேணி,
விறல் வேல் வென்றி, வேலூர் எய்தின் –
உறு வெயிற்கு உலைஇய உருப்பு அவிர் குரம்பை
எயிற்றியர் அட்ட இன் புளி வெஞ் சோறு,
தேமா மேனிச் சில் வளை ஆயமொடு
ஆமான் சூட்டின அமைவரப் பெறுகுவிர்.

### ஆமூர் வளமும் உழவர் விருந்தும்

நறும் பூங் கோதை தொடுத்த நாட் சினைக்
குறுங் காற் காஞ்சிக் கொம்பர் ஏறி,
நிலை அருங் குட்டம் நோக்கி, நெடிது இருந்து,
புலவுக் கயில் எடுத்த பொன் வாய் மணிச் சிரல்
வள் உகிர் கிழித்த வடு ஆழ் பாசடை,
முள் அரைத் தாமரை முகிழ் விரி நாட்போது
கொங்கு கவர் நீலச் செங் கட் சேவல்
மதி சேர் அரவின் மானத் தோன்றும்
மருதம் சான்ற மருதத் தண் பணை,
அந்தணர் அருகா, அருங் கடி வியல் நகர்,
அம் தண் கிடங்கின், அவன் ஆமூர் எய்தின் –
வலம் பட நடக்கும் வலி புணர் எருத்தின்
உரன் கெழு நோன் பகட்டு உழவர் தங்கை,

### வருத்தம் போக்கிய வண்மைச் சிறப்பு

இந்நாள்,
திறவாக் கண்ண சாய் செவிக் குருளை
கறவாப் பாலை முலை கவர்தல் நோனாது,
புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில் –
காழ் சோர், முது சுவர்க் கணச் சிதல் அரித்த,
பூழி பூத்த புழல் காளாம்பி:
ஒல்கு பசி உழந்த ஒடுங்கு நுண் மருங்குல்,
வளைக் கை, கிணை மகள் வள் உகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பு இலி வெந்ததை,
மடவோர் காட்சி நாணி, கடை அடைத்து,
இரும் பேர் ஒக்கலொடு ஒருங்கு உடன் மிசையும்
அழி பசி வருத்தம் வீட; பொழி கவுள்,
தறுகண் பூட்கை, தயங்கு மணி மருங்கின்,
சிறு கண் யானையொடு பெருந் தேர் எய்தி;
யாம் அவண் நின்றும் வருதும்.
நீயிரும்,
இவண் நயந்து இருந்த இரும் பேர் ஒக்கல்
செம்மல் உள்ளமொடு, செல்குவிர் ஆயின்.
அலை நீர்த் தாழை அன்னம் பூப்பவும்,
தலை நாள் செருந்தி தமனியம் மருட்டவும்,
கடுஞ்சூல் முண்டகம் கதிர் மணி கழாஅலவும்,
நெடுங் காற் புன்னை நித்திலம் வைப்பவும்,
கானல் வெண் மணல் கடல் உலாய் நிமிர்தர,
பாடல் சான்ற நெய்தல் நெடு வழி,
மணி நீர் வைப்பு, மதிலொடு பெயரிய,
பனி நீர்ப் படுவின், பட்டினம் படரின் –
ஓங்கு நிலை ஒட்டகம் துயில் மடிந்தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரை மர விறகின்
கரும் புகைச் செந் தீ மாட்டி, பெருந் தோள்,
மதி ஏக்கறூஉம் மாசுஅறு திரு முகத்து,
நுதி வேல் நோக்கின், நுளைமகள் அரித்த
பழம் படு தேறல் பரதவர் மடுப்ப,
கிளை மலர்ப் படப்பைக் கிடங்கில் கோமான்,



## குறுந்தொகை

*எட்டுத்தொகை நூல்களில் முதன்மையானது குறுந்தொகை. ‘நல்ல’ குறுந்தொகை எனப் பாராட்டப்பெறும் சிறப்பினைப் பெற்றுள்ளது. தொகை நூல்களில் முதன்முதலாகத் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படுவது. 4 அடிச்சிற்றெல்லையும், 8 அடிப் பேரெல்லையும் கொண்ட அகவற் பாக்களால் ஆனது. “பூரிக்கோ” என்பவரால் தொகுக்கப்பட்டது. பாடிய புலவர்கள் 205 பேர். இந்நூலைத் தொகுத்தவர் உப்பூரிக் குடிக்கிழார். பிற்கால இலக்கிய, இலக்கண உரையாசிரியர்கள் குறுந்தொகைப் பாடல்களையே மற்ற தொகைநூற் பாடல்களைவிடப் பெரிதும் எடுத்தாண்டிருக்கிறார்கள். வரலாறுகளிலும், காவியங்களிலும் இடம் பெற்ற பெருமை வாய்ந்த இறையனார், வெள்ளி வீதியார், ஆதிமந்தியார் போன்றோர் பாடிய பாடல்கள் குறுந்தொகையில் இடம் பெற்றுள்ளன. உவமையால் சிறப்புப் பெற்ற புலவர்களாக “அணிலாடுமுன்றிலார்” “காக்கை பாடினியார்” “குப்பைக் கோழியார்” போன்ற புலவர்களும் குறுந்தொகையில் இடம் பெறுகின்றனர்.*

### 1. குறிஞ்சி

எலுவ! சிறாஅர் ஏமுறு நண்ப!
புலவர் தோழ! கேளாய் அத்தை:
மாக்கடல் நடுவண் எண்நாள் பக்கத்துப்
பசு வெண் திங்கள் தோன்றியாங்குக்
கதுப்பு அயல் விளங்கும் சிறுநுதல்
புதுக்கோள் யானையின் பிணித்தற்றால் எம்மே
(துறை : தலைமகன் பாங்கற்கு உரைத்தது)

(கோப்பெருஞ்சோழன்)

### 2. நெய்தல்

“பூஇடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீர்உறை மகன்றில் புணர்ச்சி போலப்
பிரிவுஅரிது ஆகிய தண்டாக் காமமொடு
உடனுயிர் போகுகதில்ல – கடன் அறிந்து,

இருவேம் ஆகிய உலகத்து
ஒருவேம் ஆகிய புன்மைநாம் உயற்கே''

(துறை : காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது)

(சிறைக்குடி ஆந்தையார்)

### 3. மருதம்

தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்து இன்புறாஅர் ஆயினும் கையில்
ஈர்த்து இன்புறூம் இளையோர் போல,
உற்று இன்புறேஎம் ஆயினும், நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்து இன்புற்றெனம், செறிந்த வளையே.

(துறை : தோழி தலைமகன் வாயில்கட்கு உரைத்தது)

(தும்பிசேர்கிழார்)

### 4. முல்லை

அவரோ வாரார் முல்லையும் பூத்தன;
பறியுடைக் கையர் மறியினத்து ஒழிய,
பாலொடு வந்து கூழொடு பெயரும்
ஆடுடை இடைமகன் சென்னிச்
சூடிய எல்லாம் சிறுபசு முகையே.

(துறை : பிரிவிடைப் பருவ வரவின்கண் வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி உரைத்தது)

(உறையூர் முதுகொற்றன்)

### 5. பாலை

கழிய காவி குற்றும் கடல
வெண்தலைப் புணரி ஆடியும் நன்றே
பிரிவுஇல் ஆயம் உரியது ஒன்றுஅயர



அமிழ்து விளை தீம் கனி ஔவைக்கு ஈந்த,
உரவுச் சினம் கனலும் ஒளி திகழ் நெடுவேல்,
அரவக் கடல் தானை, அதிகனும்; கரவாது,
நட்டோர் உவப்ப, நடைப் பரிகாரம்
முட்டாது கொடுத்த, முனை விளங்கு தடக் கை,
துளி மழை பொழியும் வளி துஞ்சு நெடுங் கோட்டு
நளி மலை நாடன், நள்ளியும்; நளி சினை
நறும் போது கஞலிய நாகு முதிர் நாகத்து,
குறும் பொறை, நல் நாடு கோடியர்க்கு ஈந்த,
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை, ஓரியும்; என ஆங்கு,
எழு சமம் கடந்த எழு உறழ் திணி தோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந் நுகம்.

### நல்லியக்கோடனின் தலைமைச் சிறப்பு

விரி கடல் வேலி வியலகம் விளங்க,
ஒரு தான் தாங்கிய - உரனுடை நோன் தாள் -
நறு வீ நாகமும் அகிலும் ஆரமும்
துறை ஆடு மகளிர்க்குத் தோட் புணை ஆகிய
பொரு புனல் தரூஉம், போக்கு அரு மரபின்,
தொல் மா இலங்கைக் கருவொடு பெயரிய
நல் மா இலங்கை மன்னருள்ளும்,
மறு இன்றி விளங்கிய வடுஇல் வாய் வாள்,
உறு புலித் துப்பின், ஓவியர் பெருமகன் -
களிற்றுத் தழும்பு இருந்த கழல் தயங்கு திருந்து அடி,
பிடிக் கணம் சிதறும் பெயல் மழைத் தடக் கை,
பல் இயக் கோடியர் புரவலன் - பேர் இசை
நல்லியக்கோடனை நயந்த கொள்கையொடு.

### புரவலனிடம் பரிசுபெறச் சென்ற விதம்

தாங்கு அரு மரபின் தன்னும், தந்தை
வான் பொரு நெடு வரை வளனும், பாடி,
முன் நாள் சென்றனம் ஆக -

ஒவத்து அன்ன உண்துறை மருங்கில்
கோவத்து அன்ன கொங்குசேர்பு உறைத்தலின்,
வரு முலை அன்ன வண் முகை உடைந்து,
திரு முகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை,
ஆசு இல் அங்கை அரக்குத் தோய்ந்தன்ன
சேயிதழ் பொதிந்த செம் பொற் கொட்டை,
ஏம இன் துணை தழீஇ, இறகு உளர்ந்து,
காமரு தும்பி காமரம் செப்பும்
தண் பணை தழீஇய தளரா இருக்கைக்
குண புலம் காவலர் மருமான்-ஒன்னார்
ஓங்கு எயிற் கதவம் உருமுச் சுவல் சொறியும்
தூங்கு எயில் எறிந்த தொடி விளங்கு தடக்கை,
நாடா நல் இசை, நல் தேர்ச் செம்பியன்-
ஓடாப் பூட்கை உறந்தையும் வறிதே: அதாஅன்று.

### ஏழு வள்ளல்களின் சிறப்பு

வானம் வாய்த்த வள மலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந் திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்,
பெருங் கல் நாடன், பேகனும்; சுரும்பு உண
நறு வீ உறைக்கும் நாக நெடு வழிச்
சிறு வீ முல்லைக்குப் பெருந் தேர் நல்கிய,
பிறங்கு வெள் அருவி வீழும் சாரல்
பறம்பின் கோமான், பாரியும்; கறங்கு மணி
வால் உளைப் புரவியொடு வையகம், மருள,
ஈர நல் மொழி, இரவலர்க்கு ஈந்த,
அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சு வரு நெடு வேல்,
கழல் தொடித் தடக் கை, காரியும்; நிழல் திகழ்,

நீல, நாகம் நல்கிய, கலிங்கம்
ஆல் அமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த,
சாவம் தாங்கிய சாந்து புலர் திணி தோள்,
ஆர்வ நன் மொழி, ஆயும்; மால் வரைக்
கமழ் பூஞ் சாரல் கவினிய நெல்லி



இவ் வழிப்படுதலும் ஒல்லாள் அவ்வழிப்
பரல்பாற் படுப்பச் சென்றனள் மாதோ
செல்மழை தவழும் சென்னி
விண்உயர் பிறங்கல் விலங்குமலை நாட்டே.

(துறை : மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது)

(மதுரை ஆசிரியன் கோடங்கொற்றன்)

## நற்றிணை

*எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாக நற்றிணை விளங்குகிறது. 9 அடிச் சிற்றெல்லையும், 12 அடிப் பேரெல்லையும் கொண்டு ஐந்திணை தழுவிய 400 பாடல்களைக் கொண்டது. இவற்றை 275 புலவர்கள் பாடியுள்ளனர். இந்நூலைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதியாவான். இந்நூலில் 192 புலவர்கள் பெயர்களே காணப்படுகின்றன. ஒருசில பெயர் தெரியாத புலவர்கள் அவர்கள் பாடிய பாடலடியில்வரும் உவமைகளால் குறிப்பிடப்படுகின்றனர். மலையனார், தனிமகனார், விழிக்கட் பேதையார், பெருங்கண்ணனார், தும்பிசேர்கீரனார், தேய்புரிப் பழங்கயிற்றினார் போன்ற பெயர்களைச் சான்றாகக் கொள்ளலாம். இந்நூலின் மூலம் கடையெழு வள்ளல்களைக் குறித்தும், குறுநில மன்னர்களைக் குறித்தும் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் அறவாழ்வு, கொடை, ஆட்சித்திறம், பழக்கவழக்கங்கள் போன்ற சமூக வரலாற்றுச் செய்திகளையும் தன்னகத்தே கொண்டதாக இந்நூல் விளங்குகிறது. தலைவன் பிரிவை எண்ணித் தலைவி சுவரில் கோடிட்டு எண்ணி வருந்துதல், பல்லி ஒலித்தல் கொண்டு சகுனம் அறிதல், மகளிர் தைந்நீராடி நோன்பு நோற்றல், கால்பந்து விளையாடுதல் போன்ற பல சிறப்புக்களையும் கொண்டதாக இந்நூல் விளங்குகிறது.*

1. பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத் தொருகை ஏந்திப்
புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
'உண்'ணென் றொக்குபு புடைப்பத் தெண்நீர்

முத்தரிப் பொற்சிலம் பொலிப்பத் தத்துற்
றரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரிமெலிந் தொழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்?
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோ றுள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுதுமறுத் துண்ணும் சிறுமது கையளே!

திணை : **பாலைத்திணை**

துறைவிளக்கம் : செவிலி தலைவியது இல்லறம் கண்டு வந்து நற்றாய்க்கு உணர்த்துதல்.

(போதனார்)

2. கானமும் கம்மென் றன்றே, வானமும்;
வரைகிழிப் பன்ன மையிருள் பரப்பிப்
பல்குரல் எழிலி பாடோ வாதே
மஞ்சுதவழ் இறும்பிற் களிறுவலம் படுத்த
வெஞ்சின உழுவைப் பேழ்வாய் ஏற்றை
அஞ்சுதக உரறும் ஓசை கேளாத்
துஞ்சுதியோ இல தூவி லாட்டி
பேரஞர் பொருத புகர்படு நெஞ்சம்
நீர்பெய் நெருப்பின் தணிய, இன்றவர்
வாரா ராயின் நன்றுமன் சாரல்
விலங்குமலை ஆரா றுள்ளுதொறும்
நிலம்பரந் தொழுகும் என்நிறைஇல் நெஞ்சே?

திணை : **குறிஞ்சித்திணை**

துறைவிளக்கம் : தலைவன் இரவுக்குறி வந்து சிறைப்புறமாக இருந்தான். அவன் விரைவில் வரைந்து கொள்ளுதற் பொருட்டு தோழி சொல்லியது.

(நல்லாவூர் கிழார்)



### வஞ்சி மாநகரின் சிறப்பு

கொழு மீன் குறைய ஒதுங்கி, வள் இதழ்க்
கழுநீர் மேய்ந்த கய வாய் எருமை
பைங் கறி நிவந்த பலவின் நீழல்,
மஞ்சள் மெல் இலை மயிர்ப் புறம் தைவர,
விளையா இளங் கள் நாற, மெல்குபு பெயரா,
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும்
குட புலம் காவலர் மருமான் – ஒன்னார்
வட புல இமயத்து, வாங்கு விற் பொறித்த
எழு உறழ் திணி தோள், இயல் தேர்க் குட்டுவன் –
வரு புனல் வாயில் வஞ்சியும் வறிதே: அதாஅன்று.

### தமிழ் நிலை பெற்ற மதுரையின் மாண்பு

நறவு வாய் உறைக்கும் நாகு முதிர் நுணவத்து
அறை வாய்க் குறுந் துணி அயில் உளி பொருத
கை புனை செப்பம் கடைந்த மார்பின்,
செய் பூங் கண்ணி செவிமுதல் திருத்தி,
நோன் பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த
மகாஅர் அன்ன மந்தி, மடவோர்
நகாஅர் அன்ன, நளி நீர் முத்தம்
வாள் வாய் எருந்தின் வயிற்றகத்து அடக்கி,
தோள் புறம் மறைக்கும், நல் கூர் நுசுப்பின்,
உளர் இயல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற
கிளர் பூண் புதல்வரொடு கிலுகிலி ஆடும்
தத்து நீர் வரைப்பின் கொற்கைக் கோமான்;
தென் புலம் காவலர் மருமான்; ஒன்னார்
மண் மாறு கொண்ட, மாலை வெண் குடை,
கண் ஆர் கண்ணி, கடுந் தேர்ச் செழியன்;
தமிழ் நிலைபெற்ற, தாங்கு அரு மரபின்
மகிழ் நனை, மறுகின் மதுரையும் வறிதே: அதாஅன்று.

### உறந்தையின் சிறப்பு

நறு நீர்ப் பொய்கை அடைகரை நிவந்த
துறு நீர்க் கடம்பின் துணை ஆர் கோதை,

பாலை நின்ற பாலை நெடு வழிச்
சுரன் முதல் மராஅத்த வரி நிழல் அசைஇ-

### அழகுமிக்க விறலியருடன் இளைப்பாறும் இரவலன்

ஐது வீழ் இகு பெயல் அழகு கொண்டு, அருளி,
நெய் கனிந்து இருளிய கதுப்பின்; கதுப்பு என,
மணிவயின் கலாபம், பரப்பி, பல உடன்
மயில், மயிற் குளிக்கும் சாயல்; சாஅய்
உயங்கு நாய் நாவின் நல்எழில் அசைஇ,
வயங்கு இழை உலறிய அடியின்; அடி தொடர்ந்து,
ஈர்ந்து நிலம் தோயும் இரும் பிடித் தடக் கையின்,
சேர்ந்து-உடன் செறிந்த குறங்கின், குறங்கு-என,
மால் வரை ஒழுகிய வாழை: வாழைப்
பூ எனப் பொலிந்த ஓதி; ஓதி,
நளிச் சினை வேங்கை நாள்மலர் நச்சி,
களிச் சுரும்பு அரற்றும் சுணங்கின் சுணங்கு பிதிர்ந்து,
யாணர்க் கோங்கின் அவிர் முகை எள்ளி,
பூண் அகத்து ஒடுங்கிய வெம் முலை; முலை என,
வண் கோட் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன் சேறு இகுதரும் எயிற்றின்; எயிறு என,
குல்லை அம் புறவில் குவி முகை அவிழ்ந்த
முல்லை சான்ற கற்பின்; மெல் இயல்;
மட மான் நோக்கின் - வாள் நுதல் விறலியர்
நடை மெலிந்து அசைஇய நல்மென் சீறடி
கல்லா இளையர் மெல்லத் தைவர,

### இரவலனை விளித்தல்

பொன் வார்ந்தன்ன புரி அடங்கு நரம்பின்
இன் குரல் சீறியாழ் இடவயின் தழீஇ,

நைவளம் பழுநிய நயம் தெரி பாலை
கை வல் பாண்மகன் கடன் அறிந்து இயக்க,
இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇ,
துனி கூர் எவ்வமொடு துயர் ஆற்றுப்படுப்ப,
முனிவு இகந்திருந்த முது வாய் இரவல!



# அகநானூறு

*பெயரிலேயே 'அகம்' என்றிருக்கும் பழைய இலக்கியம் இஃதொன்றே ஆகும். அகம், அகப்பாட்டு, நெடுந்தொகை என்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு. 13 அடி முதல் 31 அடி வரையிலான 400 பாடல்களைக் கொண்டுள்ளது. அகநானூற்றில் முதல் 120 பாடல்கள் 'களிற்றியானை நிரை' என்றும், 121 முதல் 300 வரையிலான பாடல்கள் 'மணிமிடைப் பவளம்' என்றும், இறுதி 100 பாடல்கள் 'நித்திலக்கோவை' என்றும் மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளது.*

*அகநானூற்றைத் தொகுத்தவர் உப்பூரிக் குடிக்கிழார் மகனார் உருத்திரசன்மனார். தொகுப்பித்தோன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. அகநானூற்றைப் பாடிய புலவர்கள் எண்ணிக்கை 145 இந்நூலில் குடவோலைத் தேர்தல் முறை, மணமுறை ஆகியவை விரிவாகக் கூறப்பட்டுள்ளது.*

*1,3,5,7 என இறும் எண்களைக் கொண்டவை : பாலைத் திணைக்குரியவை*

*2, 8 என இறும் எண்களைக் கொண்டவை : குறிஞ்சித் திணைக்குரியவை.*

*4 என இறும் எண்களைக் கொண்டவை : முல்லைத்திணைக் குரியவை*

*6 என இறும் எண்களைக் கொண்டவை : மருதத்திணைக் குரியவை*

*10, 20, 30 என சுழியால் அமையும் பாடல்கள் : நெய்தல் திணைக்குரியவை என திணை அடிப்படையில் பாடல்கள் அமைந்து பாடப் பெற்றுள்ளன.*

## 1. குறிஞ்சி

அன்னாய்! வாழி! வேண்டு அன்னை! நின்மகள்,
'பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு,
நனி பசந்தனள் எனவினவுதி அதன்திறம்
யானும் தெற்றென உணரேன் மேல்நாள்,
மலிபூஞ் சாரல் என் தோழிமாரோடு
ஒலிசினை வேங்கை கொய்குவம் சென்றுழி,
'புலிபுலி!' என்னும் பூசல் தோன்ற

ஒண் செங்கழுநீர்க் கண்போல் ஆய்இதழ்
ஊசி போகிய சூழ்செய் மாலையன்,
பக்கம் சேர்த்திய செச்சைக் கண்ணியன்,
குயம்மண்டு ஆகம் செஞ்சாந்து நீவி,
வரிபுனை வில்லன், ஒருகணை தெரிந்துகொண்டு,
'யாதோ, மற்றுஅம் மாதிறம் படர்?' என
வினவி நிற்றந்தோனே அவற் கண்டு,
எம்முள் எம்முள் மெய்ம் மறைபுஒடுங்கி,
நாணி நின்றனெமாக, பேணி,
'ஐவகை வகுத்த கூந்தல் ஆய்நுதல்
மைஈர் ஓதிமடவீர்! நும் வாய்ப்
பொய்யும் உளவோ?' என்றனன். பையெனப்
பரிமுடுகு தவிர்த்த தேரன், எதிர்மறுத்து
நின்மகள் உண்கண் பல்மாண் நோக்கிச்
சென்றோன்மன்ற அக் குன்று கிழவோனே.
பகல் மாய்அந்திப் படுசுடர் அமையத்து,
அவன்மறை தேஎம்நோக்கி, 'மற்று இவன்
மகனே தோழி!' என்றனள்
அதன் அளவு உண்டுகோல், மதிவல்லோர்க்கே.
(செவிலித்தாய்க்குத் தோழி அறத்தொடு நின்றது)

– **தங்கால் முடக்கொற்றனார்**

### 2. பாலை

சாரல் யாஅத்து உயர்சினை குழைத்த
மாரிஈர்ந்தளிர் அன்ன மேனிப்,
பேர்அமர் மழைக்கண், புலம்புகொண்டு ஒழிய,
ஈங்குப் பிரிந்து உறைதல் இனிது அன்று; ஆகலின்
அவணது ஆக, பொருள் என்று உமணர்
கண நிரைஅன்ன, பல்கால், குறும்பொறைத்
தூது ஒய்பார்ப்பான் மடிவெள் ஓலைப்
படையுடைக்கையர் வரு தொடர் நோக்கி,
'உண்ணாமருங்குல் இன்னோன் கையது
பொன் ஆகுதலும் உண்டு என, கொன்னே



2. சிற்றி னற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினு மறியே னோரும்
புலி சேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ விதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.

திணை : வாகை
துறை : ஏறாண்முல்லை
ஆசிரியர் : காவற்பெண்டு பாடியது

## சிறுபாணாற்றுப்படை

*சிறிய பாணரை ஆற்றுப்படுத்துவதால் சிறு பாணாற்றுப் படை என வழங்கப்படுகிறது. 269 அடிகளை உடையது. பாடியவர் நல்லூர் நத்தத்தனார். பரிசு பெற்ற பாணன் பரிசு பெற விழைபவனை ஓய்மா நாட்டு நல்லியக்கோடனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது. ஆசிரியப்பாவால் அமைந்தது. விறலி வர்ணனை, மூவேந்தர்களின் தலைநகரச் சிறப்பு, கடையெழு வள்ளல்களின் கொடைத்திறம், சிறுபாணரின் வறுமை, நல்லியக்கோடனின் வீரம், கொடை, விருந்தோம்பல், பரிசளிக்கும் திறன் போன்றவை சுட்டப் பெறுகின்றன.*

### வேனிற்காலம்

**மணி மலைப் பணைத் தோள் மா நில மடந்தை
அணி முலைத் துயல்வரூஉம் ஆரம் போலச்,
செல்புனல் உழந்த சேய் வரல் கான்யாற்றுக்
கொல்கரை நறும் பொழில் குயில் குடைந்து உதிர்த்த
புதுப் பூஞ் செம்மல் சூடி, புடை நெறித்து
கதுப்பு விரித்தன்ன காழ் அக நுணங்கு அறல்
அயில் உருப்பனைய ஆகி, ஐது நடந்து,
வெயில் உருப்புற்ற வெம் பரல் கிழிப்ப,
வேனில் நின்ற வெம் பத வழி நாள்
காலை ஞாயிற்றுக் கதிர் கடாவுறுப்ப,**

# புறநானூறு

*புறம் பற்றிய 400 பாடல்களைக் கொண்டது புறநானூறு. இந்நூலுக்கு புறம், புறப்பாட்டு என்னும் வேறு பெயர்களும் உண்டு. தொகுத்தவர் பெயரும் தொகுப்பித்தவர் பெயரும் தெரியவில்லை. 4 அடி முதல் 40 அடிவரையிலான பாடல்கள் இடம்பெறுகின்றன. அகவற் பாவால் அமைந்தது. புறநானூற்றுப் புலவர்களின் எண்ணிக்கை 157. இவர்களில் பத்துக்கு மேற்பட்டோர் பெண்பாற் புலவர்கள். பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். வெட்சி முதல் பெருந்திணை ஈறாகக் கூறப்பட்ட புறப்பொருள் கருத்துக்களைத் தழுவி அமைந்த செய்யுள்களைக் கொண்டு அமைந்த நூல். சேர, சோழ, பாண்டிய மன்னர்கள், சிற்றரசர்கள், வேளிர்கள், கடையெழு வள்ளல்கள், புலவர்கள், கொடை, மக்கள் வாழ்க்கை, உணவு, உடை, நடை போன்ற பல்வேறு செய்திகளை நமக்குத் தெரியப்படுத்தும் நூல் புறநானூறாகும்.*

1. **மெல்ல வந்தென் னல்லடி பொருந்தி**
**ஈயென விரக்குவ ராயிற் சீருடை**
**முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்**
**இன்னுயி ராயினுங் கொடுக்குவெ னிந்நிலத்**
**தாற்ற லுடையோ ராற்றல் போற்றாதென்**
**உள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதிற்**
**றுஞ்சுபுலி யிடறிய சிதடன் போல**
**உய்ந்தனன் பெயர்தலோ வரிதே மைந்துடைக்**
**கழைதின் யானைக் காலகப் பட்ட**
**வன்றிணி நீண்முளை போலச் சென்றவன்**
**வருந்தப் பொரேஎன் ஆயின் பொருந்திய**
**தீதுஇல் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்**
**பல்லிருங் கூந்தர் மகளிர்**
**ஒல்லா முயக்கிடைக் குழைக என்தாரே!**

**திணை : காஞ்சி**
**துறை : வஞ்சினக்காஞ்சி**
**ஆசிரியர் : சோழந் நலங்கிள்ளி பாடியது**



தடிந்து உடன்வீழ்ந்த, கடுங்கண் மழவர்,
திறன் இல்சிதாஅர் வறுமை நோக்கிச்,
செங்கோல் அம்பினர் கைந்நொடியாப் பெயரக்,
கொடிவிடு குருதித் தூங்கு குடர்கறீஇ,
வரி மரல் இயவின் ஒருநரி ஏற்றை,
வெண்பரல் இமைக்கும் கண்பறி கவலைக்,
கள்ளி நீழல் கதறுபு வதிய,
மழை கண்மாறிய வெங்காட்டு ஆர்இடை,
எமியம் கழிதந்தோயே பனி இருள்!
பெருங் கலி வானம் தலைஇய
இருங்குளிர் வாடையொடு வருந்துவள் எனவே!

(தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது)

**– 'பாலை' பாடிய பெருங்கடுங்கோ**

# கலித்தொகை

*பாவகையால் பெயர் பெற்றது இந்நூல். 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' என்றும் 'கல்வி வலார் கண்ட கலி' என்றும் பழம் புலவர்களால் பாராட்டப் பெறுகிறது. கலித்தொகையில் உள்ள மொத்தப் பாடல்கள் 150. இவற்றில் இதிகாச நிகழ்வுகள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. "கொல்லேறு தழுவல்" பற்றிய செய்திகள் முல்லைக்கலியில் இடம் பெற்றுள்ளன. கலித்தொகைப் பாடல்கள் ஓரங்க நாடகம் போல் அமைந்துள்ளன. பாடல்கள் பெரும்பாலும் பாண்டியனையும், பாண்டிய நாட்டைப் பற்றியும் மட்டுமே பேசுகின்றன. தொகுத்தவர் நல்லந்துவனார். தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை.*

1. சுடர்த்தொடீஇ! கேளாய் தெருவில்நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டுஓடீ,
நோ தக்கசெய்யும்சிறு, பட்டி, மேல்ஓர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா, 'இல்லீரே!
உண்ணுநீர் வேட்டேன்' எனவந்தாற்கு, அன்னை
அடர்பொன் சிரகத்தால் வாக்கிச் சுடர்இழாய்!
உண்ணுநீர் ஊட்டிவா என்றாள்; என, யானும்

தன்னை அறியாது சென்றேன்; மற்றுஎன்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு
அன்னாய்! இவன்ஒருவன் செய்ததுகாண் என்றேனா,
அன்னை அலறிப் படர்தரத் தன்னையான்.
'உண்ணுநீர் விக்கினான்' என்றேனா, அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவ மற்றுஎன்னைக்
கடைக்கணால் கொல்வான்போல் நோக்கி நகைக்
கூட்டம்
செய்தான்அக் கள்வன் மகன்.

(குறிஞ்சிக்கலி)

2. தெரிஇணர் ஞாழலும் தேம்கமழ் புன்னையும்,
புரிஅவிழ் பூவின கைதையும் செருந்தியும்,
வரிஞிமிறு இமிர்ந்துஆர்ப்ப, இருந்தும்பி இயைபுஊத-
செருமிகு நேமியான் தார்போலப் பெருங்கடல்
வரிமணல் வாய்-சூழும் வயங்குநீர்த் தண்சேர்ப்ப!
கொடுங்கழி வளைஇய குன்றுபோல், வால்எக்கர்

நடுங்குநோய் தீர, நின்குறிவாய்த்தாள் என்பதோ
கடும்பனி அறல்இகு கயலேர்கண் பனிமல்க,
இடும்பையோடு இனைபுஏங்க, இவளைநீ துறந்ததை?
குறிஇன்றிப் பன்னாள்நின் கடுந்திண்தேர் வருபதம்கண்டு,
எறிதிரை இமிழ்கானல், எதிர்கொண்டாள் என்பதோ-
அறிவுஅஞர் உழந்து ஏங்கி ஆய்நலம் வறிதாகச்
செறிவளை தோள்ஊர, இவளைநீ துறந்ததை?
யாமத்துவந்து, நின் குறிவாய்த்தாள் என்பதோ-
வேய்நலம் இழந்ததோள் வியங்கிழை பொறையாற்றாள்
வாள்நுதல் பசப்புர, இவளைநீ துறந்ததை?
ஆதலால்,
இறைவளை நெகிழ்ந்த எவ்வநோய் இவள்தீர,
'உரவுக்கதிர்தெறும்' எனஓங்குதிரை விரைபு, தன்
கரைஅமல் அடும்புஅளித் தாஅங்கு
உரவுநீர்ச் சேர்ப்ப! அருளினை அளியே.

(நெய்தற்கலி)



# அலகு – II
# செய்யுள்